பரமக்குடி நகராட்சி அலுவலகம்,
நாள்.29.10.2021

**<u>நிகழும் திருவள்ளுவராண்டு அக்டோபர் மாதம் 29 ம் நாள் (29.10.2021) காலை 11.30 மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள சாதாரண கூட்டப் பொருள்கள்</u>**

| | |
|---|---|
| பொருள்–1 | 209 (தனி) பரமக்குடி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட நகராட்சி பகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களை சீராய்வு பணி மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க திருத்தமுறை (Summary Revision ) (தொடர்ச்சியாக படிவம் 6,7,8 மற்றும் 8ஏ ஆகிய படிவங்களை பெற்று சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தங்கள் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.<br>மேற்கண்ட பணிகள் குறித்து இந்திய தேர்தல் ஆணையம், மாநில தேர்தல் ஆணையம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அவ்வப்போது தெரிவிக்கப்படும் பணியினையும், உள்ளாட்சி தேர்தல் எதிர் நோக்கி தற்போது வாக்காளர் பட்டியலில் சீராய்வு பணியில் மேற்கண்ட படிவங்களில் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தங்கள் போன்ற தொடர் பணியினை மேற்கொள்ள அதற்கு (Computer Operator) கணினி இயக்குபவர் மூலம் (Continually Electrole uploaded to the system ) மேற்படி பணிகள் மேற்கொள்ள இருப்பதால் தேர்தல் பணியின் அவசர அவசியம் கருத்தில் கொண்டு தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் (Daily Wageas )மாவட்ட ஆட்சியரின் அவர்களின் உத்தரவு கடிதம் ந.க.ஏ3/614/2021 நாள் 28.06.2021ல் அங்கீகரிக்கப்பட்ட கொள்முதல் கமிட்டியில் ஒப்புதல் வழங்கப்பட்ட சம்பள விலை விகிதத்தின்படி நவம்பர் 2021, டிசம்பர் 2021, ஜனவரி 2022 மற்றும் பிப்ரவரி 2022 நான்கு மாதத்திற்கு 85 வேலை நாட்களுக்கு மட்டும் நாள் ஒன்றுக்கு ரூ.537/– வீதம் ஒருவரை நியமித்து கொள்ளவும் மேற்கண்ட தேர்தல் பணிக்கு இதனால் ஏற்படும் ஊதிய செலவின உத்தேச தொகை ரூ.45645/–ஐ பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.1968/2018/சி3 (தே)<br><br>**தீர்மானம் எண்.1479, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–2 | பரமக்குடி நகராட்சியின் தணிக்கை கணக்குகள் 2020–2021ம் ஆண்டுக்கு பணி மேற்கொண்டதற்கு திரு.வி.சீனிவாசன் என்பவர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டது மேற்படி பணியினை முடித்து கணக்குகளை ஒப்படைக்கப்பட்டுள்ளது. திரு.வி.சீனிவாசன் பட்டியல் படி ரூ.40000/– நாற்பதாயிரம்)தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கிகி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1) மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மன்றம் தணிக்கை முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகையினை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1480, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–3 | பரமக்குடி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இயங்கி வரும் வாகனங்களை நகர்மன்ற தீர்மான எண்.1047 நாள் 31.08.2019ன் படி, Exsernet, Madurai என்ற நிறுவனம் 10 ஓட்டுநர்களை கொண்டு 01.12.2019 முதல் 31.10.2019 வரை பணிகள் மேற்கொண்டுள்ளனர். அதனைத் தொடர்ந்து, ஓட்டுநர் பணிகளில் எவ்வித புகாருக்கும் இடமின்றி |

| | |
|---|---|
| | பொதுசுகாதார வாகனங்களை இயக்கி உள்ளதால், ஒப்பந்த ஷரத்துகளின்படி, இந்நகர்மன்றத் தீர்மான எண்.1275 நாள்.28.10.2020–இன்படி, 01.11.2020 முதல் 31.10.2021 வரை மேலும் ஒரு வருட காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் பொதுசுகாதார வாகனங்களை இயக்கிட Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் மேற்கண்ட நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட பணி உத்தரவு வருகின்ற 31.10.2021ம் தேதியுடன் முடிவடைகின்றது.<br>Exsernet, Madurai என்ற நிறுவனம் 10 ஓட்டுநர்களைக் கொண்டு பொது சுகாதார வாகனங்களை இயக்கும் பணிகளை எவ்வித புகாருக்கும் இடமின்றி மேற்கொண்டு வருவதாலும், பொதுசுகாதார அவசியத்தினை கருத்தில் கொண்டும் மேற்கண்ட நிறுவனத்திற்கு 01.11.2021 முதல் 31.01.2022 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக் குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. Exsernet, Madurai என்ற நிறுவனத்திற்கு 01.11.2021 முதல் 31.01.2022 வரை மேலும் மூன்று மாத காலத்திற்கு அதே ஊதிய விகிதத்தில் ஓட்டுநர் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1481, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–4 | பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திரு. எம். வி. எஸ். ரெத்தினம் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். S.A(MD)No.803/2007 ன் படி இரண்டாம் மேல்முறையீடு செய்து வழக்கு தொடர்ந்துள்ளார். பரமக்குடி நகர் ஐந்துமுனைரோடு, வார்டு – ஜி, பிளாக்–2, நகரப்புல எண்.212 இடம் நகரளவு ஆவணங்களின்படி தவறுதலாக வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.கண்ணன் அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும், மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி மன்றம் முன்அனுமதி வழங்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1482, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–5 | பரமக்குடி நகராட்சி ஆணையாளரை இரண்டாம் பிரதிவாதியாக கொண்டு திரு. சங்கர் என்பவர் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு எண். W.P.(MD)No. 18277/2021 நாள்.30.09.2021ன்படி வழக்கு தொடர்ந்துள்ளார். பரமக்குடி நகர் பகவத் சிங் ரோடு, வேந்தோணி மாறுகால் ஓடைப்பகுதியில் உள்ள கட்டிடத்தின் கட்டுமானப்பணி தொடர்பாக வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் நகராட்சி சார்பாக வழக்கறிஞர் திரு.கண்ணன் அவர்கள் ஆஜராகி வழக்கை நடத்திடவும், மேற்படி வழக்கிற்கான செலவு தொகையினை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1.மன்றம் அனுமதிக்கலாம்.<br>2.அவசர அவசியம் கருதி மன்றம் முன்அனுமதி வழங்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1483, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td>பொருள்–6</td>
<td>209 பரமக்குடி சட்ட மன்ற தொகுதிக்குட்பட்ட நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலினை எதிர் நோக்கி வாக்காளர் பட்டியல்களை செம்மைபடுத்துதல் தொடர்பாக வாக்காளர் சரிபார்ப்பு பணிகள் பொது மக்கள் அறியும் வண்ணம் விளம்பரப்படுத்துதல் மற்றும் இதர தேர்தல் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ள இருப்பதால் உள்ளாட்சி தேர்தல் பணிகளுக்கு இதனால் ஏற்படும் அனைத்து செலவினங்களுக்கும் உத்தேச செலவினம் ரூ.50000/– பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு–</u><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2308/சி4/2019)<br><br>தீர்மானம் எண்.1484, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>பொருள்–7</td>
<td>இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் குடிநீர் வாகனம் டி.என்.65 7974ல் உள்ள Engine Head மற்றும் Self மோட்டார் பழுது ஏற்பட்டுள்ளதால் மேற்படி வாகனம் அவ்வப்போது பழுதடைந்த வருவதால் பொது மக்களுக்கு குடிநீர் சீராக வழங்க இயலவில்லை. மேலும் மேற்படி வாகனத்தால் பேட்டரியும் புதிதாக மாற்ற வேண்டி சூழ்நிலை உள்ளது. மேற்கண்ட பணி மேற்கொள்ள ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.26000/–க்கு மன்றத்தின் அனுமதி பெறாமல் மேற்படி குடிநீர் பணியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு நகராட்சிகளின் சடட்டம் 1920 சட்டப்பிரிவு எண் 15ன் கீழ் மேற்கொள்ளும் பொருட்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வருமாறு முன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.
<table>
<tr><td>1.</td><td>எம்/எஸ்.பாபு ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங் ஒர்க்ஸ்<br>மணி நகர் பரமக்குடி</td><td>ரூ.22400/–</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீ தீபா எண்டர்பிரைசஸ்<br>தெளிச்சாத்தநல்லூார்<br>பரமக்குடி</td><td>ரூ.23050/–</td></tr>
<tr><td>3.</td><td>எம்/எஸ் அபராஜித் ஆட்டோ மொபைல்ஸ் ஓட்டப்பாலம் பரமக்குடி</td><td>ரூ.22850/–</td></tr>
</table>
மேற்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள எம்/எஸ்.பாபு ஆட்டோமொபைல்ஸ் இஞ்சினியரிங் ஒர்க்ஸ் பரமக்குடி என்ற நிறுவனத்தின் மூலம் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற மேல்நடவடிக்கை தொடர்ந்ததற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br><br><u>அலுவலகக்குறிப்பு–</u><br><br>1.மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மேற்படி குடிநீர் வாகனத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்ற நகராட்சிகளில் சட்டப்பிரிவு எண்15ன் கீழ் மேல்நடவடிக்கை எடுத்ததையும் அங்கீகரிக்கலாம்.<br><br>தீர்மானம் எண்.1485, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | |
|---|---|
| பொருள்–8 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது ந.கஎண்.**27787/2021/EA2** நாள்.**02.10.2021–ம்** தேதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி இந்நகராட்சியில் அடிப்படை சேவை பணியான குடிநீர் மற்றும் தொடர்புடைய உட்கட்டமைப்புகளை இயக்கி பராமரிக்கும் பணிக்கு போதுமான பணியாட்கள் இல்லாத காரணத்தால் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தி தினசரி சேவைகள் செயல்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது . அதன்படி இந்நகராட்சியில் குடிநீர் பராமரிப்பு பணிக்கு அளவு கோலின்படி நீரேற்று நிலையங்கள் மற்றும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி வாயிலாக தினசரி குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு மொத்தம் **6**மின்னாளர்கள் மற்றும் உதவியாளர்கள்**21** நபர்கள் தேவைப்படுகிறார்கள். மேலும் இந்நகராட்சியில் தற்பொழுது **7**உதவியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருவதால் மீதம் **6**மின்னாளர்கள் மற்றும் **14**உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள். அதன்படி **6**மின்னாளர்கள் மற்றும் **14**உதவியாளர்களை வெளிக்கொணர்வு மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியில் அமர்த்துவதற்கு விரிவான திட்ட பிரேரணை ஆண்டு ஒன்றுக்கு ரூ.**54.82** இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டதை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரரேரணை சமர்ப்பிக்கவும் மேல்நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம்<br>**தீர்மானம் எண்.1486, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–9 | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களது ந.கஎண்.27787/2021/ EA2 நாள்.**02.10.2021–ம்** தேதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி இந்நகராட்சியில் அடிப்படை சேவை பணிகளான தெருவிளக்குகள் இயக்கி பராமரிக்கும் பணிக்கு போதுமான பணியாட்கள் இல்லாத காரணத்தால் வெளிக்கொணர்வு முகமை மூலம் பணியாட்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்தி தினசரி சேவைகள் செயல்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சியில் தெருவிளக்குகள் இயக்கி பராமரிக்கும் பணிக்கு அளவு கோலின்படி **5** மின்கம்பியாளர்கள், **5**மின்கம்பி உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள் தற்போது இந்நகராட்சியில் **3** மின்கம்பியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருவதால் மீதம் **2** மின்கம்பியாளர் மற்றும் **5** மின்கம்பி உதவியாளர்கள் தேவைப்படுகிறார்கள் எனவே 7 நபர்களை வெளிக்கொணர்வு முகமை மூலம் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்துவதற்கு தயாரிக்கப்பட்டுள்ள விரிவான திட்ட பிரரேணை ஆண்டு ஒன்றுக்கு ரூ.**17.90** இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளதை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பிரேரணை சமர்ப்பிக்கவும் மேல் நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br><br>மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**தீர்மானம் எண்.1487, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–10 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் தேதிய கடிதம் ந.க.எண்.21787/2021/EA–2 நாள்.02.10.2021 வெளிக்கொணர்வு முகமை மூலம் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளுக்கு பணியாளர்களை பணியமர்த்துதல் தொடர்பாக அளவுகோல்கள் நிர்யணயம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, பரமக்குடி நகராட்சி சுமார் 13.45 சதுரமீட்டர் பரப்பளவைக் கொண்ட 36 வார்டுகளாக பிரிக்கப்பட்ட 972 தெருக்களைக் கொண்ட முதல் நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியில் 2011ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கீட்டின்படி 95547 ஆகும். தற்போதைய மக்கள் தொகை 105000 என கணக்கிடப்பட்டுள்ளது. பரமக்குடி நகரத்திற்கு சுற்றியுள்ள கிராமங்களிலிருந்து ஏறக்குறைய 10000 நபர்கள் வந்து செல்லும் முக்கிய நகரமாக உள்ளது. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பொதுசுகாதாரம் மற்றும் துாய்மைப்பணி மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத நிலை உள்ளது. |

| | |
|---|---|
| | எனவே பரமக்குடி நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொடர்பான கணக்கீட்டின்படி, 217 துப்புரவுப்பணியாளர்களும், 27 ஓட்டுநர்களும், 18 துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்களும் தேவைப்படுகிறது. ஆனால் தற்போதைய நிலையில் நிரந்தர தூய்மைப் பணியாளர்கள் 62 நபர்களும், நிரந்தர ஓட்டுநர்கள் 6 நபர்களும், நிரந்தர துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள் 7 நபர்களாலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே, அளவுகோலின்படி மீதமுள்ள தூய்மைப் பணியாளர்கள் 147 நபர்களும், ஓட்டுநர்கள் –13 நபர்களும், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர்கள்–11 நபர்களும் தேவைப்படுகிறது. இதற்கு ஆகும் செலவினம் ஒரு வருடத்திற்கு ரூ.355.00 லட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும், ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் தனித்திறன் மதிப்பீடு செய்து ஒப்பந்த தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து மன்றத்தின் ஒப்புதல் பெற்று ஒப்பந்தத்தினை புதுப்பிக்கவும், தனியார் மூலம் ஒப்பந்தப்புள்ளி கோரி பணியர்மர்த்திக்கொள்ளவும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நிர்வாக அனுமதி வேண்டியுள்ளது, மன்றத்தின் அனுமதிக்கு<br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1488, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–11 | நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னைஅவர்களின் ந.க.எண்.15959/2021/டபிளயு.எஸ்.1 நாள் 27.08.2021ன்படி உள்ளாட்சி அமைப்புகளில் அம்ரூத் 2.0 அல்லது ஜல் ஜீவன் மிஷன் (நகரங்கள்) திட்டம் மற்றும் சாலைப்பதிவேடு தயார் செய்து பராமரிப்பது தொடர்பாக, ஆலோசனை வழங்குவது குறித்து 01.09.2021 அன்று நடைபெறும் காணொளி காட்சியில் கலந்து கொள்ள அறிவுறுத்தியதைத் தொடர்ந்து பார்வை 2ல் காணும் காணொலி காட்சியில் நகர்ப்புறங்களில் ஜல் ஜீவன் மிஷன் (நகரங்கள்) திட்டம் தொடர்பான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்ய வேண்டும் எனவும் அதற்குரிய Administration plan water supply Distrubution Plan. Sewarage Pumping Plan, Water supply HSC ward wise plan ஆகியவற்றை Auto cod வாயிலாக தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. மேலும் உள்ளாட்சி அமைப்புகளில் பராமரிக்கப்பட்டு வரும் சாலைகளை உரிய அளவீடு செய்து புதிதாக சாலைப்பதிவேடு தயார் செய்யவும் சாலைகளின் தன்மைக்கேற்றவாறு வர்ணங்கள் கொடுத்து Auto cod மூலமாக Town Map தயார் செய்யவும் அறிவுறுத்தப்பட்டது. மேலும் சட்டமன்ற பேரவை அறிவிப்பின் கீழ் உள்ளாட்சிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பூங்கா அமைத்தல், நீர்நிலைகள் மேம்படுத்துதல், சாலைப்பணிகள் தெருவிளக்குகள் அமைத்தல், பொதுக்கழிப்பறை மற்றும் சமுதாயக்கழிப்பறை பரமரித்தல் ஆகிய பணிகளுக்கு உரிய விரிவாக திட்ட அறிக்கை TUFIDCO நிறுவனத்தில் Appraisel மூலமாக சமர்ப்பிக்க அறிவுறுத்தப்பட்டது. எனவே மேற்காணும் ஜல் ஜீவன் மிஷன் (நகரம்) வரைப்படங்கள், சாலை வரைபடங்கள் ஆகியவற்றை Auto cod மூலமாக தயார் செய்வதற்கும், மேற்படி அனைத்து திட்டங்களுக்கும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பொருட்டு, பிரிண்டிங் Booklet, Spirel பைண்டிங் ஆகிய பணிகள் மேற்கொள்ளவும் ஏற்படும் உத்தேச செலவினத்தொகை ரூ.475000/– மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது. மேற்படி பணிகளை குறித்த காலத்திற்குள் தயார் செய்து சமர்ப்பிக்க வேண்டியுள்ளதால் பணியின் அவசர அவசியத்தைத் கருத்தில் கொண்டு பணியினை நகராட்களின் சட்டம் 1920 மற்றும் சட்டப்பிரிவு எண்.15ன் கீழ் தனிஅலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கொண்டதையும் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br><br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2.மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்<br><br>**தீர்மானம் எண்.1489, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| பொருள்–12 | பரமக்குடி நகராட்சி ஆணையாளரை பிரதிவாதியாக கொண்டு திரு.ஜி.வெங்கடேசன், ஆணையாளர் (ஓய்வு) என்பவர், சென்னை உயர்நீதிமன்றம் வழக்கு எண்.W.P.No.1573/2019–இல், தணிக்கைத் தடை நிலுவைகளை நிவர்த்தி செய்யக் கோரி வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்கண்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத்தில் நகராட்சி சார்பாக திரு.எம்.புருஷோத்தமன் வழக்கறிஞர் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.12000/– வழங்கக் கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலகக் குறிப்பு–<br>மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**தீர்மானம் எண்.1490, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–13 | பரமக்குடி நகராட்சி பொறியியல் பிரிவு பராமரிப்பில் இயங்கி வரும் குடிநீர் லாரி வாகனம் TN.65.7979க்கு தகுதிச்சான்று (FC) 21.12.2021 அன்று முடிவடைகிறது. எனவே மேற்படி வாகனத்திற்கு புதிய தகுதிச்சான்று பெற வேண்டிய சூழ்நிலை உள்ளது. குடிநீர் லாரி வாகனத்தில் கிரீஸ்பேக்கிங், இஞ்சின் ஆயில், கியர் ஆயில் மாற்றுதல் டிங்கரிங் வேலைகள், வயரிங் வேலைகள் மற்றும் பெயிண்டிங் உள்ளிட்ட பழுதுகள் சரி செய்ய வேண்டியுள்ளதாக வண்டி ஓட்டுநர் அளித்துள்ள விண்ணப்பத்தின் பேரில் மேற்படி குடிநீர் வாகனத்தின் அவசியத் தேவையை கருத்தில் கொண்டும், பொது மக்களின் குடிநீர் தேவையின் அவசியத்தை கருதியும், மேற்படி வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறும் பொருட்டு மேற்கண்ட பழுதுகளை சரி செய்ய ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.1.00க்கு லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு –**<br>மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**தீர்மானம் எண்.1491, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |
| பொருள்–14 | இந்நகராட்சி பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதாரப் பிரிவு கட்டிடத்திற்கு பயன்படுத்தப்பட்டு வந்த ஜெனரேட்டர் பழுதடைந்துவிட்ட காரணத்தினால் மின்தடை நேரங்களில் அலுவலகப் பணிகள் மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்படுகின்றது. மேலும் தற்போது நகரில் நடைபெற்று வரும் திட்டப்பணிகள் மேற்கொள்ள அவ்வப்போது ஆன்லைனில் ஏற்றுவதற்கும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்தில் இருந்து வரும் திட்டப்பணிகள் தொடர்பான விபரங்களை தெரிந்து கொள்வதற்கும் சிரமங்கள் ஏற்படுகின்றது. மேலும், உள்ளாட்சி தேர்தல் தொடர்பான முக்கிய விபரங்களை தெரிவித்து தொடர்பு கொள்ளவும் சிரமங்கள் ஏற்படுகின்றது. ஏனவே மேற்கண்ட தடைகளை சரிசெய்யும் பொருட்டு பழுதடைந்துள்ள ஜெனரேட்டரை பழுதுநீக்கம் செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு ஏற்படும் உத்தேச செலவினத் தொகை ரூ.**90,000/–**க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு–**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**தீர்மானம் எண்.1492, அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |